சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை

திருமதி. வி.பி.சுகந்தி., எம்.எல்.,
சார்பு நீதிபதி

2017-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்: 13/2017**

மாதம்மாள் ... வாதி

//எதிராக//

1.நாகப்பன்
2.ராணி
3.காளியம்மாள்
4.சந்திரமதி
5.முனியப்பன் .... பிரதிவாதிகள்

WEB COPY

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பு இன்று 31.10.2017-ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், 1-வது பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.எஸ்.சசிகுமார் அவர்கள் ஆஜராகியும், போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டும், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு முறைப்படி அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாத காரணத்தால், தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், வாதி தரப்பு கேட்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்:

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது தாவா சொத்துக்களை நலந்தீது கலந்து ஆறு சம பாகமாகப் பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் வழங்கும்படி முதல்நிலைத் தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கக் கோரியும், அவ்வாறு பிரிக்கப்பட்ட பாகத்தை வாதிக்கு 1 முதல் 5

பிரதிவாதிகள் தனி சுவாதீனம் வழங்கக் கோரியும், மேற்படி வீதம் பிரதிவாதிகள் செய்யத் தவறும்பட்சத்தில், நீதிமன்றம் மூலம் இறுதிநிலைத் தீர்ப்பாணை பெற்றுக்கொள்ள அனுமதி அளித்தும், இவ்வழக்கின் செலவுக்காகவும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா ஆகும்.

**2. தாவா பிராதின் சுருக்கம்:**

வாதியும், 1-வது பிரதிவாதியும், லேட்.கெம்பன் முதல் மனைவி கரிசி என்பவருக்கு பிறந்தவர்கள். கரிசி இறந்த பின்பு கெம்பன், ராஜம்மாள் என்பவரை 2-வதாக திருமணம் செய்துக் கொண்டு அதன் பயனாக 2 முதல் 5 பிரதிவாதிகள் பிறந்தனர். ராஜம்மாளும் இறந்துவிட்டார். லேட்.கெம்பன் பெயரில் தாவா சொத்து தமிழ்நாடு அரசால் பட்டா எண் 122 வழங்கப்பட்டு அது குறித்து யாதொரு உயில் சாசனமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார். அந்தச் சொத்தில் வாதிக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் சரிசம பாக உரிமை உள்ளது. தந்தை கெம்பன் இறந்தபிறகு தாவா சொத்தில் வாதியின் 1/6 பங்குரிமைய பிரித்துக் கொடுக்கும்படிக்கு கேட்டதற்கு 1-வது பிரதிவாதி தாவா சொத்தில் வாதிக்கு யாதொரு பாத்தியமும் இல்லை என்று சொல்லிவிட்டார். அதனால் 15.02.2016-ஆம் தேதி, வாதி, 1-வது பிரதிவாதிக்கு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார். அதனை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டும் பதில் எதுவும் கொடுக்கவில்லை. அதனால் வாதி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

2. பிரதிவாதிகளுக்கு முறைப்படி இந்நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டு 1-வது பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டார்கள். 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு முறைப்படி அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகவில்லை. அதனால் 2 முதல் 5 பிரதிவாதிகளும் தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டார்கள். வாதி தரப்பில்

WEB COPY

சத்திய நிரூபனப் பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

4. இவ்வழக்கின் வாதி, வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தாவாவில் கூறியுள்ள சங்கதிகளையே தனது சத்திய நிரூபனப் பிரமாணப் பத்திரத்திலும் தெரிவித்துள்ளார். மேலும் தாவா சொத்து குறித்து வாதி, 1-வது பிரதிவாதியிடம் பாகம் பிரித்துக் கொடுக்கும்படி கேட்டு அதனை 1-வது பிரதிவாதி மறுத்ததால் 15.02.2016-ஆம் தேதி 1-வது பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை வா.சா.ஆ.1-ஆகவும், அதனை 1-வது பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையை வா.சா.ஆ.2-ஆகவும், கெம்பன் பெயரில் உள்ள பட்டா எண் 122-க்கான சிட்டா நகலை வா.சா.ஆ.3-ஆகவும் தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.3-லிருந்து தாவா சொத்து வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையான கெம்பன் பெயரில் உள்ளதாகத் தெரிய வருகிறது. கெம்பன் என்பவரின் முதல் மனைவி கரசி மூலம் பிறந்தவர்கள் வாதியும், 1-வது பிரதிவாதியும் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. கரசி இறந்த பின்பு ராஜம்மாள் என்பவரை மேற்படி கெம்பன் இரண்டாவதாக திருமணம் செய்துக் கொண்டு, அந்த வகையில் 2 முதல் 5 பிரதிவாதிகள் பிறந்ததாகவும், மேற்படி ராஜம்மாளும் இறந்து விட்டதாக வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்து மேற்படி கெம்பனுக்கு தமிழ்நாடு அரசால் பட்டா மூலம் பாத்தியப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தாவா சொத்து குறித்து மேற்படி கெம்பன் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்து விட்டதாக வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில், அதனை மறுக்கும் வகையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவர்களது தரப்பினைத் தெரிவிக்கவில்லை. மேலும் வாதியும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் மேற்படி கெம்பனின் வாரிசுகளாக உள்ள நிலையில், தாவா சொத்து மேற்படி கெம்பனுக்கு பட்டாபடி பாத்தியப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், தாவா சொத்தில் அனைவருக்கும் சரிசம பாகம் உள்ளது. அந்த வகையில் தாவா சொத்தில் வாதிக்கும் 1/6 பாகம் உரிமை உள்ள நிலையில், அதனை பிரித்துக் கொடுக்க வேண்டியது பிரதிவாதிகளின் கடமையாக உள்ளது. அவ்வாறு பாகம் கொடுக்க முடியாது என்று 1-வது பிரதிவாதியால்

WEB COPY

சொல்லப்பட்டுள்ள காரணத்தால் தான் வாதி இந்நீதிமன்றத்தை நாடியுள்ளார். தாவா சொத்தில் வாதிக்கும் 1/6 பாக உரிமை உள்ள நிலையில், அதனை பிரதிவாதிகள் கொடுக்க மறுக்க முடியாது. எனவே வாதி தாவாவில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் அவருக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5. **முடிவாக, தாவா சொத்தை நலந்தீது கலந்து 6 சம பாகமாகப் பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கி அதன் தனி சுவாதீனத்தை, பிரதிவாதிகள், வாதிக்கு வழங்க வேண்டுமென்று செலவுத் தொகையுடன் முதல்நிலைத் தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 31.10.2017-ஆம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

WEB COPY

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 .. மாதம்மாள்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

வா.சா.ஆ.1 .. 15.02.2016/1-வது பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.2 .. அஞ்சல் ஒப்புகை அட்டை

வா.சா.ஆ.3 .. லேட்.கெம்பன் பெயரில் உள்ள பட்டா எண் 122-ன் சிட்டா நகல்

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை

WEB COPY